அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 07/2007

எனது இல: ஆ/2/3/2/70
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,

2007 மே ...28... ஆம் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதான செயலாளர்கள்,
மற்றும் திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்,

## அரசகரும மொழிகள் கொள்கையைச் செயற்படுத்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் படி சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரச கரும மொழிகளாக இருக்கின்றமையால் அரசாங்க உத்தியோகத்தர்கள் அவ்விரு மொழிகளிலும் செயலாற்றுவதற்கு உதவக்கூடிய வகையில் கீழ்க்காணும் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) 2007.07.01 ஆம் திகதி முதல் அரசாங்க சேவையில் /மாகாண அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையில் சேரும் அரசகரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழியில் சேவையில் சேர்ந்து 5 வருடங்களுக்குள் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

(ஆ) பதவிகளுக்கு உரிய கடமைகளின் படி தேவைப்படும் அரச மொழித் தேர்ச்சி கீழ்க்காணும் வகையில் 3மட்டங்களைக் கொண்டது .அதற்கமைவாக இனங்காணப்பட்ட பல சேவைகள் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

i. க.பொ.த(சா.தரம்) பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியை பிரதான பாடமாகக் கொண்டு சித்தி பெற்றிருத்தல்(இரண்டாம் மொழியாக அல்லது விருப்பத்துக்குரிய பாடமாக அல்லது) அத்துடன் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பேச்சுப்பரீட்சையில் சித்தியடைதல் அல்லது அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் விசேட தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். பின்னிணைப்பில் முதலாவது வகுதிக்கு இவ்வேற்பாடு ஏற்புடையது.

ii. அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பாடநெறியின் இரண்டாம் நிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். பின்னிணைப்பில் 2 ஆவது வகுதிக்கு இவ்வேற்பாடு ஏற்புடையது.

iii. அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பாடநெறியின் ஆரம்ப மட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். பின்னிணைப்பில் 3 ஆவது வகுதிக்கு இவ்வேற்பாடு ஏற்புடையது.

(இ) ஏதாவது பதவி அல்லது சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினருக்கு அவர்களது கடமைகளின் இயல்புக்கேற்றவாறு பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2ஆம் 3ஆம் வகுதிகளின் தேர்ச்சி மட்டத்துக்கு மேலான உயர் மட்டத்தில் தேர்ச்சி தேவைப்படும் என நியமிப்பு அதிகாரி கருதினால் இது தொடர்பிலான பரிந்துரையை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரூடாக தாபனப் பணிப்பாளர் மா அதிபதியிடம் சமர்ப்பித்து தேர்ச்சி மட்டத்தை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். தாபனப் பணிப்பாளர் மா அதிபதி தேவையான தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிக்கும் போது அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் விதப்புரை பெற்றுக் கொள்ளப்படும்.

(உதாரணம்: பின்னிணைப்பில் 14 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞான சேவையில் சில பதவிக்கு 3ஆம் வகுதியின் தேர்ச்சி மட்டம் போதுமானதாக இல்லாவிடில் காரணங்களைக் காட்டி 1ஆம் அல்லது 2ஆம் வகுதி தேர்ச்சி மட்டத்துக்கு மாற்றமுடியும்.)

(ஈ) பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள் / பதவிகளில் நிரல்படுத்தப்படாத சேவைகள் / பதவிகள் பொருட்டு ஏற்புடைய வகுதிகள் தாபனப் பணிப்பாளர் அதிபதியினால் தீர்மானிக்கப்படும். அவ்வாறு தீர்மானிக்கும் போது தாபனப் பணிப்பாளர் அதிபதி சம்பந்தப்பட்ட பதவிகளுக்குரிய அமைச்சின் செயலாளர் மற்றும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

02. நியமனத் திகதியிலிருந்து 5 வருடங்களுக்குள் மேற்படி (அ) வில் குறிப்பிட்ட அரச கரும மொழித் தேர்ச்சியை பெறத் தவறும் உத்தியோகத்தர்களின் வேதன அதிகரிப்பு அவர்கள் தகைமை பெறும் வரை பிற்போடப்படும்.

03. அனைத்து சேவைப் பிரமாணக் குறிப்புகளும் ஆட்சேர்ப்பு திட்டங்களும் அதற்கமைவாக திருத்தப்பட வேண்டியதுடன் 2007.07.01 முதல் செய்யப்படும் ஆட்சேர்ப்புக்கள் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படும் போதும் நியமனக் கடிதங்களிலும் இந்த ஏற்பாடுகள் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

04. 2007.07.01 அன்று அல்லது அதன் பின்னர் அரச சேவையில் / மாகாண அரச சேவையில் செய்யப்படும் ஆட்சேர்ப்புக்கள் பொருட்டு மட்டுமே இந்த ஏற்பாடுகள் ஏற்புடையதாவதுடன் தரப்படுத்தப்பட்ட பதவி உயர்வுகள் மற்றும் சேவையாளர்களுக்கு மட்டுமே உரிய வரையறுக்கப்பட்ட / சிறப்புத் திறமை முறையிலான பதவி உயர்வுகள் போன்ற ஆட்சேர்ப்பு பொருட்டு ஏற்புடையதல்ல.

05. 2007.07.01 ஆம் திகதிக்கு பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2007 இன் ஏற்பாடுகள் ஏற்புடையதல்ல.

06. அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் இணக்கப்பாட்டுடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ டி.திசாநாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

u.2.c-7-7

பின்னிணைப்பு

| | சேவை / பதவி | பெற வேண்டிய தேர்ச்சி மட்டம் | | |
|---|---|---|---|---|
| | | வகுதி 1 | வகுதி 2 | வகுதி 3 |
| 01 | இலங்கை நிர்வாக சேவை | ✓ | | |
| 02 | இலங்கை கணக்காளர் சேவை | ✓ | | |
| 03 | இலங்கை திட்டமிடல் சேவை | ✓ | | |
| 04 | இலங்கை கல்வி நிர்வாக சேவை | ✓ | | |
| 05 | இலங்கை விவசாய சேவை | ✓ | | |
| 06 | உள்நாட்டு இறைவரி சேவை | ✓ | | |
| 07 | இலங்கை வரி மதிப்பீட்டு சேவை | ✓ | | |
| 08 | இலங்கை கணக்காய்வு சேவை | ✓ | | |
| 09 | நிதி உத்தியோகத்தர் | ✓ | | |
| 10 | இலங்கை பொலிஸ் சேவையில் உதவி பொலிஸ் கண்காணிப்பாளரும் அதற்கு மேற்பட்ட தரங்களும் | ✓ | | |
| 11 | சட்ட உத்தியோகத்தர் | ✓ | | |
| 12 | இலங்கை வெளிநாட்டு சேவை | ✓ | | |
| 13 | இலங்கை சுங்க சேவை | ✓ | | |
| 14 | இலங்கை தொழில் நுட்ப சேவை | | | ✓ |
| 15 | இலங்கை எந்திரவியல் சேவை | | | ✓ |
| 16 | அரச மருத்துவ உத்தியோகத்தர்கள் பற்சிகிச்சை உத்தியோகத்தர்கள் | | | ✓ |
| 17 | இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | | | ✓ |
| 18 | நாடளாவிய சேவையில் சேராத திணைக்கள சேவையிலுள்ள பதவி நிலைத் தர உத்தியோகத்தர்கள் | ✓ | | |
| 19 | இலங்கை மதிப்பீட்டாளர் சேவை | ✓ | | |
| 20 | கட்டடக்கலை சேவை | ✓ | | |
| 21 | அரச முகாமைத்துவ உதவி சேவை மற்றும் நிகரான திணைக்கள சேவைகள் | | ✓ | |
| 22 | பொலிஸ் சேவையில் உதவி பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதவிக்கு கீழான பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் | | ✓ | |
| 23 | கிராம உத்தியோகத்தர்கள் | | ✓ | |
| 24 | திறந்த சேவைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து துணை உத்தியோகத்தர்கள் (தொழில் நுட்ப சேவை போன்ற சேவைகள்) | | ✓ | |
| 25 | பொது மக்கள் சுகாதார பரிசோதகர் | | ✓ | |
| 26 | வரவேற்பு உத்தியோகத்தர் | | ✓ | |
| 27 | இலங்கை கணக்காய்வு பரிசோதசர் சேவை | | ✓ | |
| 28 | தாதிச் சேவை | | | ✓ |
| 29 | குடும்ப சுகாதார சேவை | | ✓ | |
| 30 | நூலகர் சேவை | | | ✓ |
| 31 | அதிபர் சேவை | ✓ | | |
| 32 | சிறு பதவியினர் | | | ✓ |